நாள். 13.02.2024

I.A. No. 08/2023

in OS. No. 91/2011

நீ.மா.சா. 1

திரு. முல்லைவேந்தன், வழக்கறிஞர்

த/பெ. சுந்தரம்

சத்தியப்பிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

1. நான் பென்னாகரம் உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் தொழில் செய்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்த கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் அடிப்படையில் நீதிமன்ற ஆணையாளர் என்ற தகுதியில் சாட்சியமளிக்க வந்துள்ளேன். இந்நீதிமன்றம் இ.ம.எண். 117/2019 ன் அ.வ.எண். 91/2011 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் படி ஆட்சேபனையுள்ள கைரேகையை ஒப்புக்கொள்ளப்பட்ட கைரேகையுடன் ஒப்பிட்டு பார்க்கும் விதமாக ஆவணங்களை சம்மந்தப்பட்ட நபர்களிடமிருந்து அழைப்பாணை அனுப்பி பெற்று தடய அறிவியல் கைரேகை ஆய்வு கூடத்தில் முன்னிட்டு கைரேகை நிபுணர் அறிக்கை பெற்று வரவேண்டி நீதிமன்ற ஆணையளராக நியமிக்கப்பட்டிருந்தேன். அதற்குண்டான நீதிமன்ற ஆணையாளர் வராண்டானது 12.07.2019 ம் தேதியில் நீதிமன்றத்தால் எனக்கு வழங்கப்பட்டது. நீதிமன்ற ஆணையார் வாராண்டு **நீ.மா.தா.சா.ஆ. 1** ஆகும். மேற்படி எனக்கு வழங்கப்பட்ட கட்டளையை நிறைவேற்றும் விதமாக 02.09.2009 தேதியிட்ட பென்னாகரம் சார்பதிவக ஆவண எண் 2774/2009 ஆக பதிவு செய்யப்பட்டகிரைய ஆவணம் மற்றும் அதற்கு பின்னிட்ட 11.03.2010 தேதியிட்ட பென்னாகரம் SRO ஆவண எண்.1441/2010 ஆக பதிவு செய்யப்பட்ட பிழைத்திருத்தல் பத்திரத்தில் கண்ட பிரச்சனைக்குரிய கைரேகையை வாதியின் கைரேகையுடன் ஒப்பிட்டு பார்க்க ஆய்வுகூடத்திற்கு அனுப்ப வேண்டி மேற்படி ஆவணங்களை இருதரப்பினர்களிடமும் கோரிய போது தங்களிடம் ஆவணங்கள் இல்லை என்று தெரிவித்தார்கள். மேற்படி ஆவணங்கள் சார்பதிவகத்தில்பதிவஹ செய்யப்பட்ட பொது ஆவணம் என்பதால் சம்மந்தப்பட்ட சார்பதிவாளரை முன்னிலைப்படுத்த நீதிமன்றத்தில் 01.08.2019 தேதியில் படி மெமோ தாக்கல் செய்தேன். அதன் அடிப்படையில்

பென்னாகரம் சார்பதிவாளருக்கு சாட்சி சம்மன் அனுப்பப்பட்டது. 15.11..2019 ம் தேதியில் பென்னாகரம் சார்பதிவாளர் திரு. லட்சுமிகாந்தன் என்பவர் அளித்த அதிகாரமளிப்பு கடிதத்தின் அடிப்படையில் அவரது அலுவலக இளைநிலை உதவியாளர் ஆஜராகி மேற்சொன்ன கிரைய ஆவணம் மற்றும் பிழைத்திருத்தல் ஆவணங்களையும், அசல் பத்திர பதிவேட்டையும் நீதிமன்றத்தில் ஒப்புவித்தார். அதற்கு பின்னிட்டு வாதியின் கையொப்பத்தை பெறவேண்டி நீதிமன்றத்தில் வந்து கைரேகை கொடுக்குமாறு கூறிய போது வாதிக்கு உடல்நிலை சரியில்லாததால் நீதிமன்றத்தில் வந்து கைரேகை வைக்க இயலாத நிலையில் உள்ளதால் மெமோ தாக்கல் செய்யப்பட்ட மேற்படி மெமோவில் 30.10.2019 ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் வாதியின் வீட்டிற்கு சென்று வாதி மற்றும் பிரதிவாதி மற்றும் வழக்கறிஞர்கள் முன்னிலையில் வாதியிடம் கைரேகை பெற்றுவருமாறு பணிக்கப்பட்டது. எனக்கு இடப்பட்ட கட்டளையின் படி 25.02.2020 ம் தேதியில் இருதரப்பினருக்கும் எழுத்து மூலமான அறிவிப்பினை பதிவு தபால் மூலமாக அனுப்பி வைத்தேன். அதற்கு பின்னிட்டு 01.03.2020 ம் தேதியில் காலை 10 மணியளவில் வாதியின் வீட்டிற்கு சென்றோது வாதியின் வழக்கறிஞர் திரு. ஆர்.அய்யப்பன், வாதி, சாட்சிகள் மனோகரன், முத்து, சின்னப்பன் ஆகியோர்களும் இருந்த நிலையில் அவர்களது முன்னிலையில் வாதியின் கைரேகையை பெற்றேன். வாதி மற்றும் தரப்பினர்களுக்கு அறிவிப்பு அனுப்பட்டதை காட்டிலும் அஞ்சலக ரசீதுகள் (7 எண்ணிக்கை **நீ.மா.தா.சா.ஆ. 2**) மேற்படி அறிவிப்பை வாதி, பிரதிவாதி, இருவழக்கறிஞர்களும் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக அட்டை (5 எண்ணிக்கை **நீ.மா.தா.சா.ஆ. 3** ஆகும்.) வாதியிடம் இடது கைரேகை பெருவிரல் ரேகை 6 எண்ணிக்கையிலான கைரேகை பெற்று வந்து 06.03.2020 ம் தேதியிட்ட மெமோ வாயிலாக நீதிமன்றத்தில் ஒப்புவித்தேன். அதற்கு பின்னிட்டு 28.08.2022 ம் தேதி நீதிமன்றத்தில் பிரச்சனைக்குரிய மற்றும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஆவணங்களையும் நீதிமன்ற கடித ந.க.எ.ண 1646/2022 நாள். 27.08.2022 தேதியிட்ட கடிதத்தோடு சேர்த்து 29.08.2022 ம் தேதியன்று சென்னையிலுள்ள தடய அறிவியல் கைரேகை நிபுணரிடம் ஒப்புவித்து அதற்குண்டான ரசீதினை பெற்று நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். 29.08.2022 தேதியிட்ட சென்னை தடயவியல் ஆய்வுகூடத்தில் வழங்கப்பட்ட ஒப்புகை சீட்டு **நீ.மா.தா.சா.ஆ. 4** ஆகும். நீதிமன்ற ஆணையளார் தரப்பில் அதற்காக தாக்கல் செய்யப்பட்ட மெமோ **நீ.மா.தா.சா.ஆ. 5** ஆகும். அதற்கு

பின்னிட்டு 21.11.2022 ம் தேதியில் C No.56/FPB/Civil 2022 நாள். 22.1.2022 ம் தேதியிட்ட கடிதமானது எனக்கு கிடைக்கப்பெற்றது. எனக்கு தடய ஆய்வுகூடத்திலிருந்து அனுப்பப்பட்ட கடிதத்தைதாக்கல் செய்கிறேன். 21.11.2022 தேதியிட்ட தடய ஆய்வுகூட கடிதம் **நீ.மா.தா.சா.ஆ. 6** ஆகும். அதற்கு பின்னிட்டு 30.11.2022 ம் தேதியில் சென்னை தடய அறிவியல் ஆய்வுகூடத்திற்கு சென்று ஆய்வறிக்கை பெற்று 01.12.2022 ம் தேதியில் நீதிமன்றத்தில் ஒப்படைத்து எனது பணியை செவ்வனே செய்து முடித்தேன். சென்னை தடய ஆய்வுகூடத்திலிருந்து பெற்று வந்த கைரேகை நிபுணர் அறிக்கை **நீ.மா.தா.சா.ஆ. 7** ஆகும்.

**மனுதாரர் தரப்பில் விசாரணை**

1. எனக்கு நீதிமன்றத்திலிருந்து ஆணையர் வாராண்டை வழங்கப்பட்டது என்றால் சரிதான். அது என் வசம் உள்ளது என்றால் அதனை அறிக்கை தாக்கல் செய்யும் போதே நீதிமன்றத்தில் ஒப்படைத்துவிட்டேன். நான் நீதிமன்றத்தில் ஆணையர் வாரண்டை திரும்ப ஒப்படைத்த தேதி நினைவில்லை. என்னிடம் காட்டப்படும் கைரேகை நிபுணர் அறிக்கை நீதிமன்றத்தில் ஒப்படைத்தபோது தாக்கல்செய்தேனா என்றால் ஆமாம். மேற்படி மெமோவில் நீதிமன்ற ஆணையர் வாரண்டை திரும்ப ஒப்படைத்தாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் நீ.மா.தா.சா.ஆ. 1 எனக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நீ.மா.தா.சா.ஆ. 1 வாரண்டில் சம்மந்தப்பட்டநபர்களிடமிருந்து ஆவணத்தை பெற்று ஒப்படைக்க வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளதே தவிர கைரேகை பெற்று ஒப்படைக்கவேண்டும் என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் பின்னிட்டு எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மெமோவில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அதில் பணிக்கப்பட்ட படி வாதியிடமிருந்து கைரேகை பெற்றதாக சாட்சி கூறுகிறார்.

2. நீதிமன்றத்தில் 06.03.2020 ம் தேதியில் மெமோவுடன் சேர்த்து கைரேகை நிபுணரிண் அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி கைரேகை நிபுணரின் அறிக்கையானது எதிர்மனுதாரர் / வாதி தரப்பிற்கு நகல் கொடுக்கப்பட்டதாக குறிப்புகள் உள்ளது என்றால் சரிதான். மனுதாரர்/பிரதிவாதிக்கு நகல் கொடுக்கப்பட்டதாக குறிபு இல்லை என்றால் அதற்கான பிரதிவாதி நகலுடன் சேர்த்து தாக்கல் செய்ததாக சாட்சி கூறுகிறார். பிரச்சனைக்குரிய கைரேகை உள்ள

ஆவணத்தை பெறுவதற்காக என்ன முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது என்றால் திறந்த நீதிமன்றத்தில் தரப்பினர்களை பிரச்சனைக்குரிய கிரைய மற்றும் பிழைத்திருத்தல் ஆவணத்தை ஒப்படைக்குமாறு கூறப்பட்டதாக சாட்சி கூறுகிறார். அதற்கு பின்னிட்டு தரப்பினர்கள் ஆவணத்தை சார்பதிவகம் மூலமாக பெற படி மெமோ செலுத்தியதாக சாட்சி கூறுகிறார்.

3. சார்பதிவளரிடம் கோரிய ஆவணமானது நேரடியாக என் வசம் ஒப்படைக்கவில்லை. திறந்த நீதிமன்றத்தில் சார்பதிவகத்திலிருந்து வந்த அலுவலர் ஒப்படைத்தாக சாட்சி கூறுகிறார். அத்துடன் 2009, 2010 வருடத்திய கிரைய மற்றும்பிழைத்திருத்தல் பத்திரம் ஆவணத்தில் வாதியின் கைரேகையும் பெற்று சென்னை தடய அறிவியல்ஆய்வாகத்தில் ஒப்படைத்தாக சாட்சி கூறுகிறார். என்னிடம் காட்டப்படும் 30.10.2019 ம் தேதியிட்ட மெமோவில் கண்ட உத்தரவில் signature என்று தான் சொல்லப்பட்டுள்ளது தவிர கைரேகை என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 30.10.2019 ம் தேதியிட்ட மெமோ மற்றும் அதில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு மேற்குறிப்பு **நீ.மா.தா.சா.ஆ.8** ஆகும். மேற்படி மெமோவானது சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து ஆவணம் வரவழைக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டதாகும். மா.சா.ஆ. 1 மெமோவிற்கு பின்னிட்டு புதிய நீதிமன்ற ஆணையர் வாரண்ட் வழங்கப்பட்டதா என்றால் இல்லை. மா.தா.சா.ஆ.1 ல் கண்ட உத்தரவு படி வாதியின் வீட்டிற்கு சென்று கைரேகை பெற்று வந்ததாக சாட்சி கூறுகிறார். மெமோவில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதற்கு பின்னிட்டு வாதியிடம் கைரேகை பெற்று வருமாறு திறந்த நீதிமன்றத்தில் உத்தரவிடப்பட்டதாகவும் சாட்சி கூறுகிறார். நீ.மா.தா.சா.ஆ.2 ஆவணத்தில் எந்த உத்தரவின் அடிப்படையில் அறிவிப்பு அனுப்புவதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் ஐ.எண். 117/2019 மனுவில் நீதிமன்ற உத்தரவின் படி நீ.மா.தா.சா.ஆ.3 அறிவிப்பு அனுப்பியதாக சாட்சி கூறுகிறார்.

**Arrear committe meeting உள்ள நிலையில் நேரமின்மை காரணமாக மனு விசாரணையானது ஒத்தி வைக்கப்படுகிறது.**